[1990 மே, 7

2. உரிமை மீறல் பிரச்சினை

கரும்பலகைத் திட்டத்திற்குப் புத்தகங்களைத் தேர்வு செய்தல் பற்றி 27 1 1990 ஆம் நாளன்று உறுப்பினர் ஒருவர் தெரிவித்த கருத்துக்குக் கல்வி அமைச்சர் அளித்த பதில் குறித்த பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் பிரச்சினை.

பள்ளிக்கூடங்களில் உள்ள நூலகங்களுக்குக் கரும்பலகைத் திட்டத்தின் கீழ் வாங்கும் புத்தகங்களைத் தேர்வு செய்வதில் முறைகேடுகள் நடந்திருப்பதாகப் பேரவையில் 27—1—1990 ஆம் நாளன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தது தவறானது என்றும், அவை உரிமை மீறல் ஆகும் என்றும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் 23—3—1990 ஆம் நாளன்று உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினை அவையில் எழுப்பிக் கீழ்க்கண்டவாறு கூறினார் :

"மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது, நீதிமன்றத்திலே சிலர் வழக்குக்குச் சென்றுள்ளார்கள். அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப் பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி அந்தக் குழு பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். மூன்று விஷயங்களைச் சொன்னார்கள். ஒன்று, நீதிமன்றத்திலே சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது. இரண்டாவது, அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப்பட்டது என்பது. மூன்றாவது வழக்கை விசாரித்த நீதிபதி அந்தக் குழு பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதும் ஆகும். நீதிமன்றத்திற்கு சிலர் வழக்குக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மை........ அந்த மனுக்கள் மீதான விசாரணை முடிந்துவிட்டதா என்றால், இன்னும் முடியவில்லை. அந்த மனுக்கள் எல்லாம் இன்னும் விசாரணையில் இருக்கின்றன. அவற்றில் ஒன்று ரிட் பெட்டிஷன் நம்பர் 127/64/1989.. நீதிபதி வெங்கடசாமி அவர்கள் அந்த ரிட் மனுவில் 20—9—1989 அன்று இடைக்காலத் தடை உத்தரவுக்கும், எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவும் ஆணை பிறப்பித்திருக்கிறார். ஆக இங்கே, இந்த அவையிலே, கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது தவறான தகவலாகும்" என்று திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்பிரச்சினை குறித்துக் கீழ்க்கண்ட விளக்கத்தினை அளித்தார்.

" நீதிமன்றத்திற்குச் சிலர் வழக்குக்குச் சென்றிருக்றார்கள். ஒரு வழக்கை மட்டும் குறிப்பிடவில்லை. ரிட் மனு பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை. ரிட் மனுவை ஒட்டி 'பார் அண்டு அகென்ஸ்ட்' (for and against) பல்வேறு விளக்கங்கள்...... அடுத்து, அந்த வழக்கில் முழு அளவில் விசாரிக்கப்பட்டது— இதில், அந்த வழக்கில் என்று நான் சொன்ன இடத்தில், அந்த வழக்குகள் முழு அளவில் விசாரிக்கப்பட்டன. இங்கே திரு. வீரையன் அவர்கள் பேசிய அந்தக் கருத்துக்குத்தான், அந்த ஒரு வரி— வழக்கை விசாரித்த நீதிபதி இந்தக் குழு அந்தப் பாடம் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எந்தப் பாடப் புத்தகம் என்றால், இந்த வழக்கிலே மூன்றாம் கட்டத்திலே வாங்கிய புத்தகங்கள், அதுவரை வாங்கப்பட்ட புத்தகங்கள் அல்ல, அதற்காகத்தான் ரிட் மனு" என்றும்,

9.55 மணி

" மூன்றாவது கட்டம் வழக்கிலே இருக்கிறது. நான் பேசுகின்றபோது, திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய அந்தப்பிரச்சினைக்கு விளக்கம் சொல்வதற்காகத்தான் நீதிமன்றத்திலே சிலர் வழக்கிற்குச் சென்றிருக்கிறார்கள். அது ரிட் மனுவா, என்ன மனு, யார் யார் என்ற அந்த விவரத்திற்குள் நான் போகவில்லை. அந்த வழக்கிலே இந்தப் பிரச்சினை——திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை முழு அளவில் விசாரிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, இந்தக் குழு அந்தப் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டு இருக்கிறார். இதற்குத் தடை விதிக்கவில்லை. இவ்வளவுதான் நான் சொல்லி இருக்கிறேனே தவிர மாண்புமிகு உறுப்பினர் கருதுகிற அந்த வழக்கு பற்றியோ, அந்த வழக்கை வைத்துத் திசை திருப்புவதற்கோ எனக்கு அவசியமே இல்லை" என்றும். " எனவே, மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் கருதுவதைப் போல இந்த மன்றத்தினுடைய உரிமையைக் குறைக்கவோ, மாற்றவோ, பிரிக்கவோ நான் முயலவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றும் கல்வியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

If any statement is made on the Floor of the House by a Member or Minister which another Member believes to be untrue, incomplete or incorrect it does not constitute a breach of privilege.. A breach of privilege can arise only if the Member or the Minister makes a false statement or incorrect statement wilfully, deliberately and knowingly.

Incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie if it can be substantiated that would certainly bring the offence within the meaning of a breach of privilege.

இதிலிருந்து பார்க்கும்பொழுது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவையில் கூறிய செய்தி தவறு என்று கொள்வதற்கில்லை. எனவே இதில் அவை உரிமை மீறல் ஏதும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தைச் சென்னைக்கு மாற்றுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். பழனிவேல், கோ. வீரையன், எஸ். ஏ. தங்கராஜன், திருமதி பாப்பா உமாநாத் திருவாளர்கள் எல். மூக்கையா, ப. முத்துசாமி, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திருவாளர்கள் ஆ. அறிவழகன், வி. கே. சின்னசாமி, பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர், அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, "கோடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தை சென்னைக்கு மாற்றுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையைப் பற்றி அரசின்